அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 10/95

எனது இல. III / 0266/2/68/எல்/எச்ஏ-6
அரசாங்க நிருவாக உள்நாட்டு அலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07,
1995. 03. 15ஆம் திகதி.

செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

## சம்பளக் கடன்கள்- தாபன விதிக்கோவை XXIVக்குத் திருத்தங்கள்.

தாபன விதிக்கோவையின் XXIVஆம் அத்தியாயத்தின் 7.4 ஆம் துணைப்பிரிவுடன் பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்படுவதால் தாபனக் கோவை திருத்தப்படுகின்றது.

7.4.1 தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பினும் சம்பளக் கழிவு எல்லைகளின் காரணமாகத் தகுந்த பிணையாளி ஒருவரைத் தேடிக்கொள்ள முடியாதவிடத்து அதற்காக மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பிணையாளிகள் இருவர் பிணையாளிகளாக நிற்க முடியும். ஏதேனும் சந்தர்ப்பத்தில் பிரதான கடனாளியால் செலுத்தப்படாத தொகையையும் அதற்கான வட்டியையும் சமபங்காகச் செலுத்துவதற்காகப் பிணையாளிகள் இருவரும் வெவ்வேறாகப் பிணை முறியொன்றில் கைச்சாத்திட வேண்டும். அதற்காகத் தகுதிவாய்ந்த பிணையாளிகளைக் கடனாளி சமர்ப்பித்தல் வேண்டும்.

02. இதற்காக உபயோகிக்க வேண்டிய 158(ஆ) பொதுப்படிவம் இச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்: ஆர். எஸ் ஜயரத்ன
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக்
கைத்தொழில், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு.